# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.28/2023

DW1– அசோகன் நாள்.06.08.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

2ம் பிரதிவாதி என் மனைவி என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி தொண்டமாந்துறையை சேர்ந்தவர். 3ம் பிரதிவாதி கணவர் பெயர் வாசுதேவன். அவர் எனக்கு உறவினர் கிடையாது. தூரத்து சொந்தமாகும். எங்கள் வீட்டிற்கு அவர் வரபோக இருப்பார் என்றால் எப்போதாவது நல்ல மற்றும் கெட்ட காரியங்களுக்கு வருவார். என்மனைவி பூலாம்பாடியில் பிறந்தார். என்மனைவியுடன் பிறந்தவர்கள் 3 பேர். அவர்கள் நாகராஜ், ஜெயகொடி, செல்வராஜ் ஆகும். அதில் நாகராஜ் இறந்துவிட்டார். 4ம் பிரதிவாதியின் தகப்பனார் தான் மேற்படி செல்வராஜ் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 08.11.2016 ம் தேதியிட்ட கிரய ஒப்பந்தம் நகல் நான் செய்து கொண்டது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது வா.சா.ஆ.8 ஆகும். அந்த கிரய ஒப்பந்தத்தை 2024ம் ஆண்டு ரத்து செய்து விட்டேன் என்றால் சரிதான். அதனுடைய நகல் என்னிடம் காட்டப்படுவதாகும். அது வா.சா.ஆ.9 ஆகும். ஊரில் நிறைய பேர்களுக்கு நான் பணம் கொடுக்கும்போது அவர்களிடம் கிரய ஒப்பந்தம் எழுதி வாங்கிக்கொண்டு பின்னர் பணம் செலுத்தும்போது அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்யும் பழக்கம் எனக்கு உண்டு என்றால் சரியல்ல. கடன் கொடுக்கும்போது கிரய பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு கடனை திருப்பி செலுத்தும்போது மீண்டும் கிரய பத்திரம் எழுதி கொடுக்கும் வழக்கும் எனக்கு உண்டு என்றால் சரியல்ல. வாதியுடன் கிரய ஒப்பந்தம் செய்யும்போது எவ்வளவு காலம் என்று பேசிக்கொண்டோம் என்று எனக்கு ஞாபகமில்லை. 1 1/2 வருடம் என்று சொன்னால் என்னால் மறுக்கமுடியாது என்றால் எனக்கு ஞாபகமில்லை. ரூ.5,50,000/–க்கு கிரயம் பேசி ரூ.5லட்சம் ரூபாய் பணத்தை கொடுத்துவிட்டு மீதி

பணத்தை 1 1/2 வருடங்களில் கொடுக்கவேண்டுமென்று பேசிக்கொண்டோம் என்றால் காலஅளவு ஞாபகமில்லை. எனக்கு படிக்கதெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஒப்பந்தத்தில் காலஅளவு 1 1/2 வருடம் என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். ரூ.50,000/– கொடுப்பதற்கு எதற்காக 1 1/2 வருட காலம் பேசப்பட்டது என்றால் இடைப்பட்ட காலத்தில் விற்றுவிடலாம் என்ற எண்ணத்தில் நான் இருந்தபோது வாதி அதிக தொகைக்கு நான் விற்றுவிடுவேன் என்றும், தனக்கு வேறு ஆதாரம் வேண்டும் என்று கேட்டதால் ஆட்களை வைத்து பேசி ரூ.11.75 லட்சம் என்று விலைபேசி அதே தேதியில் பவர் பத்திரம் என்மனைவி பெயருக்கு வாதி எழுதிகொடுத்தார். அது பொதுஅதிகார பத்திரம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மூலம் ரூ.11.75லட்சம் கொடுக்கப்பட்டதா என்றால் ஏற்கனவே ரூ.5லட்சம் கொடுத்தது போது மீதி பணத்தை அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டது. அந்த ரசீதில் ஏற்கனவே ரூ.5லட்சம் கொடுத்தவிவரம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த ரசீது பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். பொதுஅதிகார பத்திரம் எழுதிய அன்றே பத்திர எழுத்தர் அலுவலகத்தில் எழுதப்பட்டது. ரசீதை பதிவு செய்யவேண்டுமென்று நான் கேட்கவில்லை. வாதிக்கு பணம் தேவை பட்டதாலும் வாங்கிய கடனை திரும்ப செலுத்த முடியததாலும் நான் செல்லும் விவரங்களை அவர் கேட்டுவந்தார் என்றும், அதன்அடிப்படையில் பொதுஅதிகார பத்திரம் மற்றும் ரசீது எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் பேசிய அன்று நான் நிலத்தை வைத்துக்கொள்ளவேண்டுமென்று என்ற எண்ணத்தில் பேசினேன். நான் வைத்துக்கொள்ளவேண்டுமென்று என்ற எண்ணத்தில் இருந்திருந்தால் அன்றே கிரயபத்திரம் எழுதிஇருப்பேன் என்றும், வேறு ஒரு நபருக்கு விற்பனை செய்யவேண்டுமென்று எண்ணத்தில் இருந்ததால் கிரய பத்திரம் உடனடியாக எழுதி வாங்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு விற்க வேண்டும் என்ற எண்ணம் எப்போது வந்தது என்றால் எனக்கு கடன் அதிகமான உடன் வந்தது. 04.03.2013ல் மல்லிகாவுடன் என்மனைவி ஒரு கிரய ஒப்பந்தம் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரய

ஒப்பந்தத்தில் ரூ.3,89,000/-க்கு கிரயம் கொடுப்பதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மல்லிகா என்மனைவியின் அத்தை மகள் என்றால் சரியல்ல. தூரத்து சொந்தம். தாவா சொத்தை பொறுத்து வில்லங்கம் ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ.4 கிரய ஒப்பந்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 10.06.2014ல் அந்த கிரயஒப்பந்ததை ரத்து செய்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அன்றைய தேதியிலேயே என்மனைவியின் அண்ணன் மகனான 4ம் பிரதிவாதி பெயருக்கு பெயர் அளவில் ஒரு கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதிக்கு திரும்ப கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில் நிறைய ஆவணங்களை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த அடிப்படையில் தான் வங்கியில் அடமானம் வைத்து 4ம் பிரதிவாதி கடன் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த உண்மை விவரங்கள் 4ம் பிரதிவாதிக்கு தெரியும் என்பதால் தான் அவர் நீதிமன்றத்திற்கு வந்து கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. என்பெயருக்கு போடப்பட்ட கிரய ஒப்பந்தத்தை நான் ரத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் ரத்து செய்தேன் என்றால் ஞாபகமில்லை. பொது அதிகார பத்திரம் எழுதி வாங்குவதற்கு முன்னர் அது ரத்து செய்யப்பட்டது. அது ரத்து செய்யவில்லை என்றும், அந்த வில்லங்கம் அப்படியே இருக்கட்டும் என்று வேண்டுமென்றே விட்டுவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் லேவா தொழில் செய்கிறேன் என்றும் என்னுடைய வழக்கப்படி வாதி பெற்ற கடன் ரூ.7,50,000/-த்திற்கு கிரய ஒப்பந்தம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரய ஒப்பந்தம் செய்த தேதியில் தாவா சொத்தின் மதிப்பு ரூ.11.75லட்சம் என்றால் சரியல்ல. நானும், என்மனைவி மற்றும் 3, 4 பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து கொண்டு ஆவணங்களை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. தற்போது வாதி பணத்தை கொடுக்க தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல. அதிக விலையுள்ள சொத்தை மோசடியாக ரூ.11.75லத்திற்கு வாங்கியுள்ளதாக ஆவணங்களை

உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விவரங்கள் 3, 4 பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றும் அவர்கள் வந்தால் உண்மையை சொல்லிவிடுவார்கள் என்பதால் அவர்கள் வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவம் தற்போதும் வாதியிடம் உள்ளது என்றால் 4ம் பிரதிவாதிக்கு தெரியும். அது பற்றி நேரடியாக எனக்கு தெரியாது. நான் அங்கு போகவில்லை. வாதியிடம் பணத்தை பெற்றுக்கொள்ள நான் கடமைபட்டுள்ளேன் என்றும், வாதிக்கு அவர்கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.